பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 04 | வியாழக்கிழமை | 17.04.2025 | அதிர்வு 255

## கிளிநொச்சியில் நேற்று சிக்கிய கஞ்சாப் பொதிகள்



கிளிநொச்சி, புளியம் பொக்கணைப் பகுதியில் சட்டவிரோதமாக வாகனம் 06

# பிள்ளையான் ஒரு தேசப்பற்றாளர்! புலிகளைத் தோற்கடிக்க உதவியவர்!!

## இப்படிப் போற்றுகின்றார் அவரின் சட்டத்தரணி கம்மன்பில

"விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி, நாட்டைப் பாதுகாப்பதற்காக இராணுவத்துடன் இணைந்து போராடியவர்தான் பிள்ளையான். அவர் தேசப்பற்றாளர் என்ற அடிப்படையிலேயே அவருக்காக முன்னிலையானேன்."

– இவ்வாறு பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பிள்ளையானுடன் 06





# தோல்விப் பயத்தால் எமக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போலிப் பிரசாரம்!

## யாழில் 17 சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் என்று இளங்குமரன் எம்.பி. சூளுரை

(எஸ்.நிதர்ஷன்)

**"தமிழ்க் கட்சிகளுக்குத் தற்போது தோல்விப் பயம் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் எமக்கு எதிராகப் போலிப் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்."**

**- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.** 06



# பொய், ஏமாற்று மூலம் மக்களை அச்சுறுத்தி வாக்கு வேட்டை நடத்தும் அநுர அரசாங்கம்!

## பொத்துவில் கூட்டத்தில் சஜித் குற்றச்சாட்டு



"தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படும் ஜனாதிபதி அநுர அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றார். எனினும், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரச நிதியில்லாமல் உகந்த சேவையைப் பெற்றுத் தருவோம்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"எதையும் சரியாகச் செய்யத் தெரியாது, பொய்யும் ஏமாற்றுமே தொடர்ந்து வருகின்றது. அரசும் ஜனாதிபதியும் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு மாத்திரமன்றி முழு மக்களுக்கும் சேவையாற்றுவதே ஜனாதிபதியின் பொறுப்பாகும். எனவே, இந்தத் தேர்தலில் ஐக்கிய 06




போக்குவரத்துப் பொலிஸார் என்றாலேயே 'பிடுங்கித் தின்னிகள்' என்றொரு பெயர் நம் மத்தியில் உண்டு.

அவர்களின் பிடுங்குத் தின்னி வேலைக்கு நன்கு தீனி போடுவதற்குப் புதிய கருவி ஒன்று வந்திருப்பதாக இப்போது அறிவிக்கப்படுகிறது.

வேகமாக வாகனம் ஓட்டுபவர்களைக் கண்டறிய புதிய – நவீன – வேக கமராக்களை இலங்கைப் பொலிஸ் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த சாதனங்களில் இரட்டை கமராக்கள் மற்றும் இரவு பார்வை தொழில்நுட்பம் உள்ளன. அவை சாரதியின் படம், வாகன எண் மற்றும் வேகத்தை நிகழ்நேரத்தில் படம்பிடிக்கின்றன.

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும் விபத்துகளைக் குறைக்கவும் இலங்கை பொலிஸ் இப்போது மேம்பட்ட வேகக் கமராக்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த சாதனங்கள், இரவில் கூட 1.2 கிலோமீட்டர் தூரத்திலிருந்து வாகனங்களைக் கண்டறிய முடியும். 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally









# மரம் நடுகையின் அவசியத்தை தற்போதைய காலநிலை எமக்கு உணர்த்தியிருக்கின்றது!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

"மரம் இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாது. ஆனால் மனிதன் இல்லாவிட்டால் மரங்கள் சிறப்பாக வாழும். மரம் நடுகையின் அவசியத்தை தற்போதைய காலநிலை எமக்கு உணர்த்தியிருக்கின்றது. இதை தன்னார்வமாக முன்னெடுக்கும் கிறீன் லேயர் சுற்றுச்சூழல் அமைப்புக்கு எமது மாகாண மக்கள் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிறீன் லேயர் அமைப்பின் ஏற்பாட்டில் பத்தாயிரம் நெல்லிக் கன்றுகளை நடுகை செய்யும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் தலைமையுரையாற்றிய பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, "அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தின் முக்கிய அங்கத்தினுள் ஒன்றாக மரம் நடுகையும் இருக்கின்றது. கடந்த காலங்களில் எமது பிரதேசத்தில் மரங்கள் அழிக்கப்பட்டளவுக்கு அவை நடுகை செய்யப்படவில்லை." – என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து கிறீன் லேயர் அமைப்பின் நிறுவுனர் பா.சசிக்குமார் தனது உரையில், எமது பிரதேசத்தில் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்யும் தனது இலக்கை கடந்த ஆண்டு அடைந்துள்ளதாகவும், தற்போது 10 இலட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் நெல்லி மருத்துவக் குணம் உடையது மாத்திரமல்லாது பொருளாதார ரீதியில் வருமானத்தை ஈட்டித்தரும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

உப்புநீரை நன்னீராக்கக் கூடிய தன்மையும் நெல்லி மரத்துக்கு உள்ளது எனத் தெரிவித்த அவர், வீடுகளில் வளர்ப்பதற்கு அது பொருத்தமானது என்பதையும் குறிப்பிட்டார்.

சருமங்கள் சுருங்குவதால் ஏற்படும் பாதிப்புக்கு நெல்லி மிகச் சிறந்த மருந்து என்பதால் வெளிநாடுகளில் இதன் பெறுமதி அதிகம் என்று சுட்டிக்காட்டியதுடன், நீரிழிவுக்கும் இது சிறந்ததொன்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில்,

"மரங்கள் செழிப்பாக இருக்கின்றமை வளமான நாட்டுக்கான அடையாளம். எமது மாகாணத்தில் கடந்த பல வருடங்களாக மரங்கள் பல தரப்புக்களாலும் நடுகை செய்யப்பட்டாலும் அவை உரிய பராமரிப்பு இல்லாமலும் வேறு பல காரணங்களாலும் உயிர்தப்பவில்லை. ஆனால், அண்மைக்காலமாக அப்படியில்லாமல் மரம் நடுகையுடன் நின்றுவிடாமல் அதனைப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர்.

கிறீன் லேயர் அமைப்பின் சசிக்குமார் ஆரம்பத்தில் தனியொருவனாகவே மரம் நடுகையை முன்னெடுத்திருந்தார். இன்று அவர் தனது இலக்கை விரிவுபடுத்தி இந்தச் செயற்றிட்டத்தில் பலரையும் உள்ளீர்த்திருக்கின்றார். எமது தேசத்தை வளமாக்க அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு பாராட்டுகின்றேன்.

அதேபோல் பிரதேச செயலர் சிவஸ்ரீயும் தெல்லிப்பழையில் பிரதேச செயலராகக் கடமையாற்றிய காலத்தில், மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றை சிறப்பாக முன்னெடுத்தவர். அப்படிப்பட்ட ஒருவர் இருக்கின்ற பிரதேச செயலர் பிரிவில் மரம் நடுகையை முன்னெடுத்துள்ளீர்கள். அதுவும் சிறப்பாக வெற்றியளிக்கும்.

இப்போது ஒவ்வொரு தாழமுக்கத்தை தொடர்ந்தும் எமது மாகாணத்தின் வளி மாசடைகின்றது. அயல் நாடுகளிலிருந்து வரும் காற்றால் இந்த நிலைமை ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த நிலைமைகளை ஓரளவுக்கேனும் தணிப்பதற்கு நாம் இப்போதே மரங்களை நடுகை செய்ய வேண்டும்." – என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

ஆளுநரால் பயனாளிகளுக்கு நெல்லி மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், கோப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் நெல்லி மரக்கன்றையும் ஆளுநர் நடுகை செய்தார்.





# நாளை வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்



மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலை நாளை எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும்.

கண்டி, கேகாலை, மாத்தளை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரிக்கக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் இன்றிரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.





# பெண் தொழில்முனைவோரை உருவாக்குவதற்கு நடவடிக்கை

2030ஆம் ஆண்டுக்குள் கைப்பொருள் உற்பத்தியில் 400 பெண் தொழில்முனைவோரை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய அருங்கலைகள் பேரவை தெரிவித்தது.

இதன்மூலம் 4,000 சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் பேரவை தெரிவித்தது.

2030ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16 வீத பங்களிப்பை இதன் மூலம் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# உள்ளூராட்சி தேர்தலுடன் தொடர்புடைய தாக்குதல் சம்பவங்களில் 79 பேர் கைது




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கடந்த 3 ஆம் திகதி முதல் இதுவரை 168 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 132 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்கள் உள்ளிட்ட ஏனைய சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 79 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களில் இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 18 வேட்பாளர்களும் அடங்குகின்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதி முதல் நேற்று வரை ஆயிரத்து 387 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 06 முறைப்பாடுகளும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் ஆயிரத்து 293 முறைப்பாடுகளும் வேறு குற்றங்கள் தொடர்பில் 86 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளில் ஆயிரத்து 387 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் 173 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



# மதுபோதையில் வாகனம் செலுத்திய 800 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

கடந்த 2 நாட்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 800 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

தமது சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்கு வருகை தருவதால் வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இதனால் வீதிகளில் வாகன விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நாட்களில் நாளொன்றுக்கு 05 வரையான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடுமையான காயங்கள் ஏற்பட்ட 10 க்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் போக்குவரத்து விதிகளுக்கமைய வாகனம் செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# தமிழ் உணர்வுள்ளவர்கள் ஜே.வி.பிக்கு வாக்களிக்க கூடாது

## நா.வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு!



(எஸ்.ரகுதீஸ்)

தமிழ் உணர்வுள்ளவர்கள் ஜே.வி.பிக்கு வாக்களிக்க கூடாது என வட மாகாண கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று எமது கடற்றொழில் சம்மந்தமாக எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியாதவர் ஆக்கபூர்வமாக முடிவுகளையும் எடுக்க முடியாத கையாலாகத கடற்றொழில் அமைச்சர்.

கடற்றொழில் அமைச்சர் கடற்றொழில் சம்மந்தமான வேலைகளை விட்டுட்ட தனது கட்சிக்கு உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக தனது கட்சிக்கு பிரச்சாரம் செய்து திரிகிறார்.

இங்கு எவ்வளவோ பிரசினை இருக்கு அதற்கு முகம் குடுக்காமல் தனது கட்சியை வளர்த்துக் கொண்டு திரிகிறார்.

இந்திய இலங்கை மீனவர் பிரசினை பிரசினை தொடர்பில் பேசப்பட வேண்டும். தற்போது இந்திய மீனவர்கள் மீன்பிடி தடைக் காலத்தில் உள்ளனர் இந்த வேளையில் இரு நாட்டு மீனவர்கள் பிரசினையையும் பேசி ஒரு சிறந்த தீர்வுக்கு வர வேண்டும்.

எதிர் வரும் தேர்தலில் மக்கள் கூட்டாகவுள்ள கட்சிக்கே வாக்களிக்க வேண்டும் உதிரிகளுக்கு அல்ல. தமிழ் உணர்வுள்ள தாய்ப் பால் குடித்து வளர்ந்த தமிழ் இரத்தமுள்ளவர்கள் ஜே.வி.பிக்கு வாக்களிக்க கூடாது."– என்றார்.


இணுவில் கலை இலக்கிய வட்டமும்
அறிவாலயமும் இணைந்து நடாத்தும்
கவிஞர். நாக.சிவசிதம்பரம் எழுதிய
"வேரினை நோக்கிய விழுதுகள்" (கவிதை)

**நூல் வெளியீட்டு விழா**

காலம் : 18.04.2025 (வெள்ளிக்கிழமை)
மாலை 3.30 மணி
இடம் : இணுவில் அறிவாலயம்

**தலைமை**

வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தலைவர், அறிவாலயம்.

**நிகழ்வுகள்**

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம் - திரு.அ.சண்முகப்பிரியன்
- வரவேற்புரை - திரு.ச.வாகீசன் (இணுவில் தமிழ்ச்சங்கம்)
- ஆசியுரை - செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
- வாழ்த்துரை - கவிஞர் திரு.சோ.பத்மநாதன்
- தலைமையுரை
- தொடக்கவுரை - கவிஞர் திரு.த.ஜெயசீலன், பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி.
- நூல் வெளியீட்டுரை - பேராசிரியர்.கந்தையா ஸ்ரீகணேசன், தலைவர், இணுவில் கலை இலக்கிய வட்டம்.
- நூல் வெளியீடு
- நூல் மதிப்புரைகள் - பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம். திரு.ம.பா.மகாலிங்கசிவம், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்.
- ஏற்புரை - நூல் ஆசிரியர்
- நன்றியுரை - திரு.ந.ஞானசூரியர், செயலாளர், இணுவில் கலை இலக்கிய வட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவு செய்யப்பட்ட வீடியோக் காட்சிகள் நீதிமன்றத்தில் ஆதாரமாகச் செயல்படும். இதனால் அதிகாரிகள் போக்குவரத்து மீறல்களுக்கான தெளிவான ஆதாரங்களை முன்வைக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

நாடு முழுவதும் இந்தச் சாதனங்களில் முப்பதைப் பொலிஸார் நிறுத்தியுள்ளனர், ஒவ்வொன்றும் ரூ. 33 லட்சம் செலவில் தருவிக்கப்பட்டுள்ளன. மேலும் 15 யுனிட்டுகளின் கொள்வனவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

\+ \+ \+

'கல்லுளி மங்கன் போன வழி, காடு மேடெல்லாம் தவிடு பொடி' – என்றொரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

முட்டாளின் – மங்கனின் – மக்கனின் – கையில் கல் செதுக்கும் கூர்மையான உளி கிடைத்தால் போகின்ற, வருகின்ற வழியில் எல்லாம் கிடைக்கின்ற கருங்கற்களை எல்லாம் தட்டி, நொட்டி, அவன் தவிடு பொடி பண்ணிக் கொண்டு போவான் என்பது இதன் அர்த்தம்.

அப்படித்தான் இருக்கிறது அமெரிக்க ஜனாதிபதிப் பதவி மீண்டும் டொனால்ட் டிரம்பின் கைகளில் கிடைத்த நிலைமை.

மீண்டும் பதவிக்கு வந்ததும் தன் நட்பு நாடு, அயல்நாடு, எதிரி நாடு எல்லாவற்றுக்கு எதிராகவும் கல்லுளி மங்கன் காடு மேடெல்லாம் தவிடு பொடியாக்கியமை போல, உலகெங்கும் வர்த்தகப் போரை அறிவித்து, கண்மூடித்தனமான வரி விதிப்புகளையும் முன்னெடுத்து இருக்கிறார் அவர்.

இதுவரை காலமும் மாறி மாறி அமெரிக்காவுக்கு சீனா ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு 145 வீதம் வரை வரி விதித்த அவர், இப்போது திடீரென அதை 245 வீதம் என்று அறிவித்திருக்கிறார்.

அவரது இந்த முரட்டுத்தனமான கையாள்கை மங்கனின் கைகளில் கல்லுளி கிடைத்த கதையாகத்தான் இருக்கும் போல.

\+ \+ \+

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவராக இருந்தவர் அண்ணாமலை. அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கும், இலங்கையின் பிற தமிழிடங்களுக்கும் பயணித்தவராதலால் ஈழத் தமிழர்களால் நன்கு அறியப்பட்டவர் அவர்.

தமிழக பா.ஜ.க. தலைவராக அண்ணாமலை கடந்த 4 ஆண்டுகளாக பணியாற்றி வந்தார். இதனை தொடர்ந்து இவரது பதவிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து திருநெல்வேலி தொகுதி எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன் கடந்த வாரம் பா.ஜ.க. மாநில தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதையடுத்து, அண்ணாமலைக்கு மத்தியில் பெரிய பொறுப்பு வழங்கப்படலாம் எனத் தகவல் வெளியானது. இந்த நிலையில், பா.ஜ.க. இளைஞர் பிரிவின் தேசிய தலைவராக அண்ணாமலை நியமிக்கப்படுவார் எனக் கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது.

பா.ஜ.க. யுவமோர்ச்சா பிரிவு தேசியத் தலைவராக அண்ணாமலை அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தற்போது பா.ஜ.க. யுவமோர்ச்சா தலைவராக கர்நாடக எம்.பி.தேஜஸ்வி சூர்யா பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

அதனை மறைத்துச் சென்ற வாகனமும் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

நேற்று புதன்கிழமை பகல் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

## தோல்விப் பயத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். சாவகச்சேரியில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"கடந்த தேர்தல்கள் போன்று இம்முறையும் தேசிய மக்கள் சக்திக்கே தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை வழங்குவார்கள். குறிப்பாக யாழ். மாநகர சபை உட்பட 17 சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும். அதனால் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் பலவும் பயத்தில் கலக்கமடைந்து எம்மைத் தொடர்ந்தும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். அதிலும் தாம் தேர்தலில் வெல்லாவிட்டாலும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்குப் போலிப் பிரச்சாரங்களை அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் செய்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று பலரையும் இணைத்து விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். ஆனால், இந்தக் கூட்டமைப்புப் புலிகளுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைத்திருக்கின்றது.

இவ்வாறான நிலைமையில்தான் எமக்கான ஆதரவை மக்கள் வழங்க முன்வந்துள்ள நிலையில் அதனைக் குழப்ப சதி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், சதி நடவடிக்கைகள், போலிப் பிரச்சாரங்கள், விமர்சனங்கள் எல்லாம் திட்டமிட்ட வகையில் எமக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டாலும் எமது மக்கள் மிகத் தெளிவாக எமக்கான ஆதரவை வழங்குவார்கள்.

இந்தத் தேசிய மக்கள் சக்தியானது தமிழ்க் கட்சியோ, சிங்களக் கட்சியோ, முஸ்லிம் கட்சியோ இல்லை. உண்மையில் இது மனிதநேயம் கொண்ட ஓர் அமைப்பு.

இங்குள்ள கட்சிகள் பலவும் எம்மைப் பார்த்துப் பயப்படுகின்றன. உண்மையில் எமது மக்களைத் திரும்பவும் இவர்கள் ஏமாற்ற முடியாது. இனியும் போலித் தேசியம் கதைத்து மக்களை ஏமாற்ற முடியாது.

புதிய யுகம் படைத்த இந்த மக்கள், தமிழ்க் கட்சிகளுக்குச் சிறந்த பாடம் புகட்டுவார்கள்.

நாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கண்டிப்பாக நிறைவேற்றுவோம். இதில் மக்களுக்குத் தயக்கம் வேண்டாம். அரசியல் ரீதியில் எம்மைத் தாக்க முடியாதவர்கள் எம்மை விமர்சனம் செய்கின்றார்கள்." – என்றார்.

---

## பிள்ளையான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

30 நிமிடங்கள் கலந்துரையாடினேன். சட்டத்தரணி என்ற அடிப்படையில் எனது சேவையாளருடன் இரகசியமாகக் கலந்துரையாடலாம். ஆனால், எமது உரையாடலை நான்கு பொலிஸார் முழுமையாகச் செவிமடுத்துக்கொண்டிருந்தனர்.

பிள்ளையான் கதறி அழுதவாறே என்னிடம் கேள்வி எழுப்பினார்.

"புலிகள் அமைப்பில் இருந்து விலகி, இராணுவத்துடன் இணைந்து உயிரைக்கூடப் பணயம் வைத்து புலிகளைத் தோற்கடிப்பதற்குப் போராடினேன். நல்லாட்சி காலத்தில் என்னை 5 வருடங்கள் தடுத்து வைத்திருந்தனர். இறுதியில் வழக்குத் தொடுப்பதற்குப் போதுமான சாட்சி இல்லை என்பதால் வழக்கு மீளப் பெறப்பட்டது. தற்போது மீண்டும் தடுப்பில் வைத்துள்ளனர்.

புலிகள் அமைப்பைத் தோற்கடிப்பதற்காக, நாட்டுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடியதாலா என்னை இப்படி நடத்துகின்றனர்?" என்று பிள்ளையான் மிகவும் உணர்வுபூர்வமாக என்னிடம் கேள்வி எழுப்பினார்." – என்றார் கம்மன்பில.

---

## பொய், ஏமாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தியை மக்களின் வாக்குப் பலத்தால் வெற்றி பெறச் செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

பொத்துவில் தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"எமது நாட்டு மக்கள் ஜே.வி.பியையும், திசைகாட்டியையும் ஆதரித்து ஆட்சியை வழங்கினர். வளமான நாட்டைக் கட்டியெழுப்புகின்றோம் என்று கூறினர். ஆனால், இன்று இந்த அரசு முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. ஊழல்வாதிகளை பிடிப்போம் என்றனர். போதுமான எந்த ஏற்பாடுகளும் இதுவரையில் இல்லை.

பொருட்களின் விலைகள் அதிகரித்து வருமானம் குறைந்துள்ள நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் தமது மூன்று வேளை உணவையும் பெற்றுக்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். வறுமை அதிகரித்து, வருமான மூலங்கள் குறைந்து, வாழ்வாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இந்த அரசு பொய், மோசடிகளைக் கோலோச்சி மக்களை ஏமாற்றி வருகின்றது." – என்றார்.

# 23 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது



23 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த அமெரிக்க பிரஜையொருவர் சுங்க போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்தபோது வர்த்தகர்களுக்கான பிரிவினூடாக வெளியேற முயற்சித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் காணி விற்பனை நிறுவனமொன்றில் பணிபுரியும் 31 வயதான சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி சந்தேகநபர் தமது பயணப் பையில் 23கிலோ கிராம் குஷ் போதைப்பொருளை மறைத்துவைத்து கொண்டு வந்துள்ளார்.

# 49 பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை அறிவிப்பு




தலதா மாளிகையில் இடம்பெறவுள்ள புனித தந்ததாது கண்காட்சியை முன்னிட்டு கண்டி கல்வி வலயத்தில், தெரிவு செய்யப்பட்ட 49 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை குறித்த பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தலதா மாளிகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள புனித தந்ததாது கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மின்பிறப்பாக்கியின் செயற்பாடு இடைநிறுத்தம்

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில், நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் உள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளில் ஒன்றின் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி முதல் குறித்த இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார்.

அதேநேரம், கடந்த 12 ஆம் திகதி காலை முதல் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திலும் மின்சார உற்பத்தி இடைநிறுத்தப்பட்டது.

இதன்படி, எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் எந்தவொரு மின் உற்பத்தி நிலையமும் தற்போது இயங்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கு மாத்திரம் முன்னுரிமை அளித்து மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்களத்தின் பெருங்கொடூரம்!

தமிழர் தேசத்துக்கு எதிராக பௌத்த - சிங்களப் பேரினவாதம் மேலாதிக்கத் திமிரோடு கடந்த ஏழரை தசாப்தங்களாக இலங்கைத் தீவில் புரிந்து வரும் கொடூரங்கள் அளவற்றவை.

படுகொலைகள், சொத்தழிப்புகளில் தொடங்கி, இனவழிப்பு வரை சிங்களத்தின் அரூபக்கரங்கள் தொடர்ந்து புரிந்து வரும் கொடூரங்கள் வகைதொகை இல்லாதவை. எல்லையற்றவை.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர் தேசம் மீது யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் என்று பல வகையான கொடூரச் செயல்கள் புரியப்பட்டன. அவை குறித்து நீதி, நேர்மையான - உண்மையான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, தவறிழைத்தோர் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்பு கூறல் நிலைநாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர் தீர்மானங்கள் மூலம் அறிவுறுத்தி வருகின்றது. ஆயினும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி நிலைநாட்டப்படுவதாக இல்லை.

தன்னுடைய குரூர முகத்தை - கோர சாதனைகளை - வெளிப்படுத்தவும், உண்மைகளை ஒப்புக் கொள்ளவும் பேரினவாதம் எப்போதும் மறுத்து வருகின்றது.

பேரினவாதத்தின் இந்த உச்சக் கொடூரங்களில் மிக மோசமான அம்சமாக அமைந்தது உயிரிழந்த போராளிகளின் கல்லறைகள் நிறைந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் புல்டோஸர்கள் கொண்டு ஆழத் தோண்டி, சிதைத்து, அழித்து, நிர்மூலமாக்கியமை ஆகும்.

உயிர் பிரிந்து, மீளாத் துயில் கொள்ளும் தமிழ் ஜீவன்களை - தமிழ் ஆத்மாக்களை - உறங்க விடாது புல்டோஸர் கொண்டு சிதைத்தழிப்பது மனித குலத்துக்குரிய பண்பல்ல. மிக மிக மோசமான காட்டுமிராண்டித்தனம். கொடூரப் பண்பியல்பு. மிருகத்தனமான செயல். மனித நாகரிகத்துக்கே பொருந்தாத இழிமைச் செயல்.

பஞ்சசீலம் போதித்த புத்தன் கூட அதனை அங்கீகரிக்க மாட்டான். இத்தகைய இழிசெயலைச் செய்தோர் தன் மதத்தின் பெயரால் அதை ஆற்றினர் என்று அறிந்தால் அவன் வெம்பி, வேதனைப்பட்டு, உயிர் துறந்து இருப்பான்.

தமிழ்ப் போராளிகளின் கல்லறைகளுக்கு செய்த அதே கொடூரத்தை கொரோனா காலத்தில் அத்தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களினது ஜனாஸாக்கள் மீதும் கிறிஸ்தவர்களின் புகழுடல் மீதும் அதே சிங்களம் அதே மாதிரி ஆற்றியது.

உயிரிழந்த மனிதனை மதிக்கும் மாண்பைத்தான் சிங்கள மன்னனான துட்டகைமுனு கூடப் போதித்துச் சென்றான். தன்னுடனான யுத்தத்தில் வீரமரணடைமடைந்த எல்லாளனுக்கு அவன் வழங்கிய உயரிய கௌரவம் அதுதான்.

அது கூட காலத்தால் பிந்திய இன்றைய சிங்கள முரட்டுச் சமூகத்திடம் இல்லை. இறந்தவர்களை - மீளாத் துயில் கொள்வோரை - அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் புல்டோஸர்களைக் கொண்டு தோண்டி எடுத்து அகற்றி, சண்டப்பிரசண்டம் செய்த சிங்களம், அந்த கொடூரத்திற்கு இன்னமும் மன்னிப்புக் கூடக் கோரவில்லை. அந்தச் சுடுகாடுகள் இருந்த இடங்களின் மீது இராணுவ முகாம்களை அமைத்து அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கின்றது சிங்களம்.

இந்தப் பின்புலத்தில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படும் என்று வாயால் ஆட்சியாளர்கள் புளுகுவது அர்த்தமற்றது. நியாயமற்றது. நீதியற்றது. நியாயம், தர்மம் புரிந்தவர்களை ஏமாளிகளாக கருதும் செயற்போக்கு அது.

# ஆவணமற்ற புலம்பெயர் மக்கள் தாமாக முன்வந்து அமெரிக்காவை விட்டு வெளியேற புதிய திட்டம்



ஆவணமற்ற புலம்பெயர் மக்கள் தானாக முன்வந்து அமெரிக்காவை விட்டு வெளியேற ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதன்படி, சுயமாக நாடு கடத்தப்படுபவர்களுக்கு உதவித் தொகை மற்றும் விமான டிக்கெட்டுகள் உள்ளிட்ட நிதி சலுகைகளை வழங்கவுள்ளதாக ட்ரம்ப தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சி, கடுமையான குற்றப் பதிவுகளைக் கொண்ட நபர்களை நாடு கடத்துவதற்கு முன்னுரிமை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள அதே நேரத்தில் நல்ல நபர்கள் சட்டப்பூர்வமாக அமெரிக்காவிற்குத் திரும்புவதற்கான வழியை வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ட்ரம்ப் விரிவாக கூறுகையில்,

“நாங்கள் அவர்களுக்கு ஒரு உதவித்தொகை வழங்கப் போகிறோம். நாங்கள் அவர்களுக்கு கொஞ்சம் பணம் மற்றும் விமான டிக்கெட்டை வழங்கப் போகிறோம்.

பின்னர் அவர்களுடன் இணைந்து பணியாற்றப் போகிறோம், அவர்கள் நல்லவர்களாக இருந்தால், அவர்களை மீண்டும் உள்ளே வர விரும்பினால், முடிந்தவரை விரைவாக அவர்களை மீண்டும் உள்ளே அழைத்துச் செல்ல அவர்களுடன் இணைந்து பணியாற்றப் போகிறோம்.” எனக் கூறியுள்ளார்.

இந்த புதிய அணுகுமுறையானது, குடியேற்றம் குறித்த ட்ரம்பின் முந்தைய கடுமையான நிலைப்பாட்டிலிருந்து ஒரு மாற்றத்தைக் குறிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் சில நபர்கள் சட்டப்பூர்வமாக திரும்பி வருவதற்கான மென்மையான பாதையை உருவாக்குவதில் கவனம் செலுத்துப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த திட்டத்தின் விவரங்கள், அதன் செயல்படுத்தல் காலக்கெடு மற்றும் தகுதிக்கான அளவுகோல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.






# ஜப்பானிய அமைச்சர் அமெரிக்காவிற்கு பயணம்

அமெரிக்க வரி விதிப்பிலிருந்து நிவாரணம் பெறுவதற்குப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக ஜப்பானிய பொருளாதார மறுமலர்ச்சி அமைச்சர் ரியோசி அகாசாவா மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வொஷிங்டனுக்கு பயணமாகியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜப்பானிய பிரதமர் ஷிகெரு இஷிபா ஆகியோர் வரி விதிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குக் கடந்த வாரம் இணக்கம் தெரிவித்தனர்.

வரி விதிப்பு குறித்து ஜப்பான் பெரிய சலுகைகளை வழங்காது எனவும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் விரைந்து செல்லாது எனவும் அந்நாட்டின் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், வரி விதிப்பு நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்வதற்கு அமெரிக்காவை ஜப்பான் வலியுறுத்தும் என ஜப்பானிய அமைச்சரவையின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்




ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பிராந்தியத்தில் நேற்று 5.6 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

121 கீலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

அனர்த்தத்தினால் உயிர் சேதங்கள் ஏற்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# கூட்டணி ஆட்சியை அமித் ஷா முடிவு செய்வார்: பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் உறுதி

கூட்டணி ஆட்சி இல்லை எனும் விதமாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறிய நிலையில், தமிழகத்தில் கூட்டணி ஆட்சியா? என்பது குறித்து அமித் ஷா முடிவெடுப்பார் என பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநில தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல் முறையாக நயினார் நாகேந்திரன் நேற்று சென்னை – தி.நகரில் உள்ள மாநில தலைமை அலுவலகமான கமலாலயம் சென்றார். பா.ஜ.க. தொண்டர்கள் அவருக்கு பரிவட்டம் கட்டி, பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, கமலாலயத்தில் கட்சி கொடியை ஏற்றினார். அதன் பிறகு, கட்சி நிர்வாகிகள், பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். இமயமலையில் ஆன்மிக பயணத்தை முடித்துவிட்டு, கமலாலயம் வந்த அண்ணாமலை, நயினார் நாகேந்திரனை ஆரத்தழுவி வாழ்த்து தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாநில தலைவர் இருக்கையில் அமர்ந்து அதிகாரபூர்வமாக நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்றுக்கொண்டார். இதையடுத்து செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் நடைபெற்றுகொண்டிருக்கும் தி.மு.க. ஆட்சி அகற்றப்படவேண்டும். இந்த ஆட்சியை அகற்றுவதற்கு மிகப் பெரிய எழுச்சி தெரிந்துக் கொண்டிருக்கிறது. அதற்கான விடிவு காலம் 2026 இல் வரும்.

பா.ஜ.கவில்தான் கிளை செயலாளரும் மாநில தலைவராக முடியும். மாநிலத் தலைவரும் தேசிய செயலாளராக முடியும். பா.ஜ.க. குடும்ப கட்சி கிடையாது. அண்ணாமலை பா.ஜ.கவை கட்டுப்பாடுடன் வளர்த்தார். இப்போது, என்னை மாநில தலைவர் இருக்கையில் அமர வைத்து, அவரும் என்னுடனே இருக்கிறார். எனக்கு மூன்று ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் கழித்து புதியவர் மாநில தலைவராகலாம். ஆனால், தி.மு.கவில் குடும்ப ஆட்சி தான் நடக்கிறது. தி.மு.கவில் கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், அடுத்து அவரது மகன் வருவார். பா.ஜ.கவில் தான் சமூக நீதி இருக்கிறது.

கூட்டணியை பற்றி பேசியது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தான். எனவே, தமிழகத்தில் கூட்டணி ஆட்சியா என்பது குறித்து, அந்த நேரத்தில், அமித் ஷா முடிவெடுப்பார். அது பற்றி என்னால் கருத்து கூற முடியாது. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கை சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, மக்களுக்கு எதிரான இந்த ஆட்சியை தமிழகத்தில் இருந்து அகற்ற தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அமித் ஷா அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். பா.ஜ.கவில் அண்ணாமலை புயலாக இருப்பார். நான் தென்றலாக இருப்பேன்” என்றார்.

# கீரிமலையில் ஆக்கிரமித்த இடங்களை விடுவிக்க ஜனாதிபதி பணிக்க வேண்டும்

## இன்று யாழ் வரும் அவரிடம் ஆறு. திருமுருகன் கோரிக்கை





இன்று யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி இங்கு கீரிமலை சடையம்மா மடம், ஆதிச்சிவன் கோவில் இருந்த நிலம், காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல, பாவனையிலுள்ள சுக்கிர வார சத்திர மடத்துநிலம் என்பவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கௌரவ ஜனாதிபதி அவர்களே!

நீண்டகாலமாக சைவமக்கள் வழிபாடு செய்த புராதன இடங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இன்றும் விடுவிக்கப்படாமல் உள்ளன. தாங்கள் இவற்றை விடுவிப்பதில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்போடு வேண்டுகிறோம். மேலும் பொதுமக்களின் காணிகளில் வடக்கு, கிழக்கில் படையினர் தொடர்ந்து தங்கி உள்ளனர். தாங்கள் அவ்விடயத்தில் அக்கறை கொண்டு பொதுமக்களின் நிலங்களை விடுவிக்க வேண்டும்.

பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்திற்கு அருகாமையில் பக்தர்களுக்கு இடையூறாக கோயிலுக்குச் செல்லும் பாதையில் பெட்டிக்கடைகள் அமைக்கப்பட்டு கோயில் புனிதத்தை தொடர்ந்து கெடுத்து வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக சென்ற வருடம் நல்லை ஆதீனத்துக்கு தாங்கள் வருகை தந்த போது எடுத்துரைத்தோம். தயவு செய்து வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேஸ்வர திருத்தல சுற்றாடலை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சைவ மக்கள் சார்பில் வேண்டுகிறோம்.

தாங்கள் பதவி ஏற்றதும் நீண்டகாலமாக உள்ள தமழர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைப்பேன் என கூறி வந்துள்ளீர்கள். நிரந்தரமான - பூரண உரிமைகள் உள்ளடக்கிய - தீர்வை வழங்கி, எம்மினத்தின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வாருங்கள். - என அவர் மேலும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# வவுனியாவில் குளக்கரையில் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியா, பாவற்குளத்தின் சூடு வெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து இரத்தக் கறைகளுடன் இளைஞரின் சடலம் ஒன்றை உளுக்குளம் பொலிசார் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

அந்தொ பகுதியில் அமைந்துள்ள குளத்தின் அலைகரைப் பகுதியில் சடலம் ஒன்று உள்ளமை தொடர்பாக அப்பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களால் உளுக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வவுனியா விநாயகபுரத்தை சேர்ந்த கோபிதாசன் (வயது 33) எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் புதுவருட தினமான கடந்த 14 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்தார் என அவரது குடும்பத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சடலத்தில் இரத்தக் கறைகள் படிந்துள்ள நிலையில் பல்வேறு கோணங்களில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிரபா மீது டக்ளஸின் அறச் சீற்றத்தை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

## ஈ.பி.டி.பியின் ஊடக செயலாளர் ஸ்ரீகாந்த் விளக்கம்

தேர்தல் காலங்களில் எமது கட்சிக்கு எதிராக சேறடிப்பதையும், புலிகளின் தலைமைக்கும் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான முரண்பாடுகளை வைரலாக்குவதையும் எமது அரசியல் எதிர்த் தரப்புக்கள் கையாள்வது வழக்கம்.

அவ்வாறு தற்போதும், சில காணொளிகள் சமூக ஊடகங்களில் வைரலாக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்பாக எமது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று கருதுகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“புலிகளின் தலைமையும் எமது செயலாளர் நாயகமும், எமது மக்களின சுதந்திரமான - கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்துவதற்காக இரு வேறு ஆயுதப் போராட்ட அமைப்புக்களை வழிநடத்தியவர்கள்.

எங்களுடைய கைகளிலே ஐந்து விரல்கள் காணப்படுகின்போதிலும் அவை வித்தியாசமான செயற்பாடுகளை கொண்டவையாக காணப்படுகின்றன.

அதே போன்றுதான், எமது மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட பிரதான ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தலைவர்களும் வித்தியாசமான செயற்றிறன்களையும், வேறுவேறான சிந்தனைகளையும் அணுகுமுறையையும் கொண்டிருந்தனர்.

அந்தச்வகையில் எமது செயலாளர் நாயகத்திற்கும் புலிகளின் தலைமைக்கும் இடையில் தமது இலக்கினை அடைவது தொடர்பில் வித்தியாசமான சிந்தனைகள், இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் காணப்பட்டன.

எத்தகைய அழிவுகளை கொடுத்தேனும் இலக்கை அடையும் வரையில் ஆயுதப் போராட்டத்தை வீரியமாக முன்னெடுக்க வேண்டும் என்பது புலிகளின் தலைமையின் சிந்தனை.

விவேகம் அற்ற வீரம், விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், சர்வதேச பூகோள நிலைவரங்களை அனுசரிக்க வேண்டும், இருப்பதைப் பாதுகாத்து முன்னோக்கி நகர வேண்டும், சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும், உருவாகும் சந்தர்ப்பங்களை பயன்




படுத்த வேண்டும் என்பது எமது செயலாளர் நாயகத்தின் சிந்தனை.

ஆனால் இருவருக்கும் இடையில் பொதுவான குணாம்சங்களும் காணப்பட்டன

அதாவது, தாங்கள் ஒரு விடயத்தினை தீர்மானித்து விட்டால் அதில் உறுதியாக இருந்து அதற்காக கடுமையான உழைப்பை வெளிப்படுத்துவது.

மற்றது, யாருடைய மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்கும் அடிபணியாத பிடிவாதம்.

இவ்வாறான இருவருக்கும் பொதுவான குணாம்சங்கள்தான், இருவருக்கும் இடையிலான முரண்பாடுகளை வலுப்படுத்தின.

இவர்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு எம்மத்தியில் காலத்திற்கு காலம் இருந்த சமூக சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் என்று பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை.

தன்னுடைய பயணத்திற்கு எதிரான தடைகளும், மாற்றான சிந்தனைகளும் அழிக்கப்பட வேண்டியவை என்ற தன்னுடைய சிந்தாந்தத்திற்கு அமைய புலிகளின் தலைமை எமது செயலாளர் நாயகத்தை அழிப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டது.

அவற்றை தன்னுடைய தற்துணிவினாலும் எமது தோழர்களின் அர்ப்பணிப்பாலும் எமது செயலாளர் நாயகம் முறியடித்தார்.

இந்த நிலை பல வருடங்களாக நீடித்த நிலையில் இருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் திரட்சியடைந்து வீரியமடைந்தது.

இப்போதும் 2009 இற்கு முற்பட்ட சூழல் இருக்குமாயின் இருவருக்கும் இடையிலான முரண்பாடு என்பது இன்னும் தீவிரமடைந்திருக்கும்.

இந்த முரண்பாடு என்பது ஈழத் தமிழர்களுக்காக பொங்கி எழுந்த இரண்டு தலைவர்களின் சிந்தனை வேறுபாடுகளினாலும் செயற்பாடுகளினாலும் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறான பின்னணயில்தான், எமது மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான கருத்தாடல்கள் உருவாகின்ற சந்தர்ப்பங்களில் எமது செயலாளர் நாயகம் புலிகளின் தலைமையைக் கடுமையாக விமர்சிக்கின்றார்.

இந்த நிலையில் எமது மக்கள் ஒரு யதார்த்தத்தினை புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மக்களுக்காக உருவாகிய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தையும் களத்தில் இருந்து அகற்றி, தமிழ் மக்களுக்கான பேரம் பேசும் பலத்தை பலவந்தமாக தமது கையில் எடுத்த புலிகளின் தலைமை, அதனை சரியான முறையில் பயன்படுத்த வில்லை என்ற ஆதங்கம் எமது செயலாளர் நாயகத்தின் மனதில் ஆழமாக பதிந்து இருக்கின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் எமது மக்கள் சந்தித்த அனைத்து இழப்புக்களுக்கும் புலிகளின் தலைமையின் தவறான அணுகுமுறைகளே காரணம் என்பது எமது செயலாளர் நாயகத்தின் திடமான வாதமாக இருக்கின்றது.

அதைவிட, எங்களுடைய செயலாளர் நாயகமும் சாதாரண மனிதன் என்ற அடிப்படையில், தன்னுடைய வழிமுறைகளை பின்பற்றி செயற்பட்டார்கள் என்ற ஒரே நோக்கத்திற்காக தன்னுடைய சக தோழர்களான பல ஆளுமைகள் கொலை செய்யப்பட்டமை எமது செயலாளர் நாயகத்தின் ஆழ் மனதில் ஆறாத வடுவாக இருந்து கொண்டே இருக்கின்றது.

அவை எல்லாவற்றையும்விட முக்கியமானது 2009 இற்கு பிற்பட்ட காலத்தில் அவர் எதிர்நோக்கிய நடைமுறைச் சிக்கல்கள்.

அதாவது, நூற்றாண்டுகளாக எமது மக்கள் வழிபட்டு வந்த வெடுக்கு

தொடர்ச்சி▼

# பிரபா மீது டக்ளஸின் அறச் சீற்றத்தை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

தொடர்ச்சி▲

நாறி மலையில் சிவராத்திரி வழிபாடு நடத்த அனுமதியுங்கள் என்றால், சுற்று நிரூபங்கள் என்றும் சட்டதிட்டங்கள் என்றும் சாக்கு போக்குச் சொல்கிறார்கள்.

பல்வேறு திணைக்களங்களும் கூகுளில் பார்த்துவிட்டு கையகப் படுத்திவைத்துள்ள எமது மக்களின் காணிகளை விடுக்க முயலும்போது அவர்கள் சொல்லுகின்ற ஆயிரம் வியாக்கியானங்களும் கால இழுத்தடிப்புக்களும் அவரைச் சினம் கொள்ள வைக்கின்றன.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம்..., காலத்தின் தேவையுணர்ந்து ஈடுஇணையற்ற தியாகங்களினால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான பேரம் பேசும் பலம் சரியான முறையில் கையாளப்பட்டு பாதுகாக்கப் பட்டிருப்பின், இவ்வாறு ஒவ்வொருவரும் கதை சொல்லிக் கொண்டு இருக்க முடியுமா? என்று செயலாளர் நாயகத்தின் உள்ளுணர்வு குமுறுகின்றது.

அந்தக் குமுறல் புலிளின் தலைமைக்கு எதிரான விமர்சனமாக அவ்வப்போது வெளிப்படுகின்றது. இதுதான் உண்மை.

ஆக, எமது செயலாளர் நாயகம் வெளிப்படுத்தும் புலிகளின் தலைமைக்கு எதிரான கருத்துக்கள் அறச் சீற்றமே தவிர,வேறெதுவும் இல்லை என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அறச் சீற்றத்தினை வெளிப்படுத்துகின்ற போது, புலிகளின் அமைப்பின் தியாகங்களை வைத்து போலி அரசியல் செய்கின்றவர்களினால் காண்பிக்கப்படுகின்ற பிம்பங்களையும் கற்பனைகளையும் விமர்சிக்கின்றார்.

ஆயுதப் போராட்டம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டு வளர்க்கப்பட்டது, எங்கெங்கு தவறுகள் இடம்பெற்றன, எவ்வாறு தவறுகள் இடம்பெற்றன என்பதை வெளிப்படுத்துகின்றார்.

எனவே எமது செயலாளர் நாயகத்தின் அறச் சீற்றமும், அரசியலுக்காக எதையும் மூடி மறைக்காமல் வெளிப் படுத்தும் வரலாற்று உண்மைகளுமே எமது அரசியல் எதிரிகளால் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி எடுக்கப் பட்டு எமக்கு எதிரான பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன என்பதே உண்மை" - என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை, கனிம மண் அகழும் திட்டங்களை ஜனாதிபதி தலையிட்டு நிறுத்த வேண்டும்!

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்களினுடைய நலனைக் கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் நேற்றைய தினம் ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மற்றும் கனிம மண் அகழ்வு திட்டங்களை நிறுத்துமாறு கோரி பல வருடங்களாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டங்களை நிறுத்துவதாக ஜே.வி.பி யின் சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக எம்மைச் சந்தித்து வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் இதுவரை நிறைவேற்றப் படவில்லை. காற்றாலைத் திட்டம், டைட்டானியம் அகழ்வு, கரையோரக் கனிம மணல் அகழ்வு - இம்மூன்று திட்டங்களாலும் மன்னார் தீவுப் பகுதி பல்வேறு விதமான சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் எனப் பல துறை சார்ந்த வல்லுநர்கள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் வேளையில் அரசு அதனைப் பொருட் படுத்தாமல் செயல்படுத்த முனைகிறது.

மக்களினுடைய நலனைக் கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம். கடந்த காலத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் என்றும் இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் பல்வேறு விதமான விமர்சனங்களை தெரிவித்து வந்த ஜனாதிபதி, அதே வேலையை அவரும் முன்னெடுப்பது வெட்கக் கேடான அரசியல் செயல்பாடு ஆகும்.

நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகளை வழங்கி, தேர்தலில் வெற்றி பெற்று, அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றாடுகின்றது அரசு. ஆகவே மூன்றாவது தேர்தலிலும் போலியான வாக்குறுதியை வழங்கி வெற்றி பெற முனைகிறீர்களா? நாளை மன்னாருக்கு வருகை தர உள்ள தாங்கள் இம் மூன்று திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவிக்க வேண்டும்.

இல்லையேல் நீங்கள் குற்றம் சாட்டிய படி ஏனைய அரசியல்வாதிகளுக்கும் தங்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாதவராகவே காணப்படுவீர்கள்.

அரசியலிலும் அறம் மிக முக்கியம். நீண்ட காலத்துக்கு எவரையும் ஏமாற்ற முடியாது. மீண்டும் மீண்டும் இந்த மக்களை ஏமாற்றி வாக்கு பெற முனையாதீர்கள். இது, நீங்கள் பின்பற்றுவதாக மேலிடையிடும் இடது சாரித்துவத்துக்கே அவமானமும் இழுக்கும் ஆகும்.

தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிப் படி மன்னாரில் உள்ள இம்மூன்று திட்டத்தையும் இரத்து செய்ய வேண்டும். இல்லையேல் மக்கள் தொடர்ந்து ஏமாற மாட்டார்கள் என்பது இத்தேர்தல் தங்களுக்கு உணர்த்தும். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்



# மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி மக்களின் வரிப்பணம்தான் அதற்கு ஆளும் கட்சி உரிமை கோரமுடியாது என்கிறார் சத்தியலிங்கம்

(கி.வசந்தன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியை கையாள்வதில் தடைகள் ஏற்படுமெனவும் மிரட்டல் தொனியில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னாரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய சுற்றாடல் அமைச்சர் “இந்த வருடம் பாதீட்டில் இதுவரை எந்த அரசாங்கங்களும் செய்யாத அளவிற்கு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கியுள்ளோம். இந்த நிதியை முறையாக அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியை கைப்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நிதியை செலவளிப்பதில் தடைகள் ஏற்படலாம். ஆகவே மக்கள் தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்“ என்று தெரிவித்திருந்தார்.

இது மிகமோசமான பிரசாரயுக்தியாகும். ஒரு நாட்டின் அரசாங்கத்தினால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கீடு செய்வது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். அதனை அவர்கள் தவிர்க்க முடியாது.

வடக்கு மாகாணம் இலங்கையில் தான் அமைந்துள்ளது. வடக்கு மாகாணம் நான் அறிந்தவரையில் தனி நாடல்ல. அப்படிப் பார்த்தால் கடந்த 30 வருடங்களாக

நடைபெற்ற கொடிய யுத்தத்தினால் உட்கட்டுமானங்கள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளது. அங்குள்ள மக்களின் தேவைகள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் தேவையை விட வேறுபட்டவை.

ஆகவே வடக்கு மாகாணத்திற்கு விசேடமாக அதிக நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் உங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். அதனை முறையாக பயன்படுத்த எங்களுக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் நீங்கள் வேறு யாருக்காவது வாக்களித்தால் அந்த நிதியை நாங்கள் விடுவிக்கமாட்டோம் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

மத்திய அரசினால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியானது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சொந்தமானது. அதனை அனுபவிக்க அனைத்து மக்களிற்கும் உரிமையுள்ளது. அதுவே ஜனநாயகம். பாதீட்டு நிதி என்பது தேசிய மக்கள் சக்தியின் கட்சி நிதியோ சனாதிபதியின் சொந்த நிதியோ அல்ல. இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து பெறப்படுகின்ற நிதியாகும்.

எனவே இவ்வாறான மிரட்டும் தொனியிலான பாணியில் தேர்தல் பிரசாரம் செய்வதை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அமைச்சரின் மிரட்டலுக்கு

சரியான பதிலை எதிர்வரும் தேர்தலில் வாக்குப் பலத்தினால் தமிழ் மக்கள் காட்டுவார்கள். - என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஜே.வி.பியிடம் மன்னார் உள்ளூராட்சி மன்றங்கள் வீழ்ந்தால் மன்னார் மாவட்டத்தையே காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும்

## அபாயச் சங்கு ஊதுகின்றார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.




(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தைக் காப்பாற்ற முடியாத ஒரு சூழலை அது ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றய் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம்.

இந்த நிலையில் ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பல சபைகளை கைப்பற்றும் நிலை ஏற்படும். எனினும் நாங்கள் நிர்ணயம் செய்யும் சக்தியாக இத்தேர்தலில் காணப்படுவோம். யாருடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று தீர்மானிக்கும் நிலை ஏற்படும். குறிப்பாக தேசியத்தை நேசிக்கும் தமிழ் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம்.

இனி வருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாது விட்டால் அது எமது பிரதேசங்களில் பிளவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தும். தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும். எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சி இமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட வன்னி பிரதேசங்களுக்கும் உங்களின் விஜயம் இடம் பெற வேண்டும் என அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கையை முன் வைத்து உரை நிகழ்த்தினேன்.

ஆனால் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரமே வன்னிப் பிரதேசங்களுக்கு வருகின்றனர். குறிப்பாக மன்னார் மாவட்டத்திற்கு வருகின்றனர். தேர்தலில் தமது கட்சி வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்துடன் வருகிறார்கள்.

மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடயங்களாகப் பார்க்கப்படுகின்றன. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தச் செயல்பாடுகளை நிறுத்த கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தற்போது மன்னாரிற்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்கு என்ற பெயரிலிந்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி.அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை அது ஏற்படுத்தும்.மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன.

கடந்த 6 மாதங்களுக்குள் மன்னாரிற்கு ஜனாதிபதியின் வருகை இடம் பெறவில்லை. எனினும் ஒரு சிறிய தேர்தலுக்காக அவர் மன்னாருக்கு வருகிறார். மீன்பிடி மற்றும் சுகாதார அமைச்சர்கள் மன்னாருக்கு வருவார்கள் எனக் கூறினார்கள்.இது வரை அவர்களின் வருகை இடம் பெறவில்லை.

ஆனால் தற்போது அவர்கள் எல்லோரும் மன்னாரிற்கு வருகை தருவதிக் எமது மண்ணையும், காற்றையும் வருமானமாக்குவதாகவே நோக்கமாக உள்ளது. எனவே மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். -என தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சாராயக் குப்பியும் அரிசியும் வழங்கி வாக்கு கேட்போரை நிராகரிப்போம்!

### தேசிய மக்கள் சகத்தியின் கந்தசாமி பிரபு எம்.பி. தெரிவிப்பு














(கனகராசா சரவணன்)

ஆண்களுக்கு சாரய குப்பிகளையும் பெண்களுக்கு அரிசியையும் வழங்கி வாக்கு கேட்பவர்களிடம் ஏமாந்தால் மீண்டும் 5 வருடங்கள் பழைய ஒரு துர்ப்பாக்கியமான நிலமைக்குத் தள்ளப்படுவோம். எனவே, கிராமங்களிலும் ஊழல் மோசடியற்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டுமாக இருந்தால் குற்றவாளிகளாக நிர்ணயிக்கப்பட்ட பழைய தரப்பினரை நிராகரித்து, திசைகாட்டி சின்னத்துக்கு வாக்களியுங்கள் எனத் தேசிய மக்கள் சகத்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளர்களின் புதூர் மற்றும் திருச்செந்தூர் வட்டாரங்களினது காரியாலயம் அந்தந்த வட்டார தலைவிகள் தலைமையில் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் ஏன் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனத் தெளிவாகத் தெரிவித்திருந்தார் தேசிய மட்டத்தில் ஊழல், மோசடிகளை இல்லாமல் செய்து, சிறந்த ஓர் ஆட்சி கட்டமைப்பை உருவாக்கி கொண்டு வருகின்றோம். அதன்படி அரசியல் செயற்பாட்டையும் அரசாங்கம் என்ற ரீதியில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே கிராமங்களிலும் ஊழல் மோசடியற்ற ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமாக இருந்தால் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற பழைய அதே தரப்பினருக்கும் மற்றும் குற்றவாளிகளாக நிர்ணயிக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் வாக்களித்து நாங்கள் சந்தர்ப்பம் வழங்கப் போகின்றோமா என்ற விடயத்தை முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஊரைச் சுத்தப்படுத்துகின்ற முயற்சியாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் அமையப் போகின்றது. தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் திறமையானவர்கள். எந்தவொரு ஊழல் குற்றச்சாட்டிலும் ஈடுபடாதவர்கள். சமூகத்துடன் ஒன்றிணைந்து சேவையாற்றுபவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

தற்போது எதிராகப் போட்டியிடுபவர்கள் ஆண்களுக்கு சாரயக் குப்பிகளையும் பெண்களுக்கு அரிசியையும் கொடுத்து வாக்கு கேட்பவர்கள். எனவே அதனை வாங்கி ஏமாந்தாக் மீண்டும் 5 வருடங்கள் பழைய ஒரு துர்ப்பாக்கிய மான நிலைமைக்குத் தள்ளப்படுவோம். எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இப்படிப்பட்டவர்களை நிராகரித்து, சிறப்பாக இந்த நாட்டையும் பிரதேசத்தையும் நேசிக்கின்றவர்களை சபைகளுக்கு அனுப்பவேண்டும். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# தமிழ் மக்களின் வாக்குகள் தமிழ் கட்சிகளுக்காகட்டும் சங்குச் சின்னக் கூட்டணி மன்னாரில் இப்படி வற்புறுத்து



**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வீட்டுச் சின்னத்தில் நாங்கள் பல வருடங்கள் பயணம் செய்தோம். அந்த வீடு இன்று தமிழரசுக்கட்சியின் தனிச் சின்னம் என்பதால் அந்த வீடு இன்று தனியாக சென்று விட்டது. ஆனால் இன்று ஐந்து கட்சிகள் இணைந்து எமக்கான ஒரு பொதுச் சின்னமாக சங்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் கூட்டமைப்பாக இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

எனவே சங்கு சின்னத்தை நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் மன்னார் நகரத்தையும் பலப்படுத்த முடியும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பாக மன்னார் நகர சபை தேர்தலில் போட்டியிடும் மன்னார் எழுத்தூர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் பெரியகமம் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை மாலை தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எஸ்.ஆர்.குமரேஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் நகர சபை யை வெற்றி பெற்று கைப் பற்றுகின்ற போது மன்னார் நகர சபையின் தலைவராக இங்குள்ள டானியல் வசந்த் தெரிவு செய்யப்படுவார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மன்னார் நகர சபை யை கைப்பற்றுகின்ற போதே இக்கிராமத்தையும், நகர சபைக்குட்பட்ட ஏனைய கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

பல்வேறு கட்சிகள் இன்று உங்களிடம் வாக்கு கேட்டு வந்து செல்கின்றனர். தற்போது இடம்பெற உள்ளது உள்ளூராட்சி மன்றத் தேர்தல். உங்கள் கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய விடயத்தை ஒட்டிய ஒரு தேர்தல். இத்தேர்தலுக்காகப் பல்வேறு பட்டவர்கள் உங்களிடம் வருகிறார்கள். எந்தக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் எமக்கு பிரியோசனம் உள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலிலும், அதை தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலிலும் ஓர் அலை காணப்பட்டது. அந்த அலையில் அனைவரும் விழுந்து என்ன செய்வது என்று இன்று தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற உள்ளது. இந்த நிலையில் நீங்கள் மீண்டும் அந்த அலையில் வீழ்ந்து தத்தளிக்காது தெளிவுடன் செயல்பட வேண்டும்.

நீங்கள் எல்லாம் தமிழர்கள். எனவே தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

யாராக இருந்தாலும் பரவாயில்லை. முதலில் தமிழ் கட்சிகளைத் தெரிவு செய்ய வேண்டும். தமிழர்கள் சிங்கள தேசத்திற்கு சென்று தேர்தல் கேட்டு வெற்றி பெற முடியுமா? முடியாது.

ஆனால் இன்று எமது தமிழர் பிரதேசங்களில் எல்லா உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மைக் கட்சிகள் – அதிலே குறிப்பாக ஆளும் தரப்பு – மிகவும் விசமத்தனமான முறையில் இனவாத கட்சி இன்றைய தேர்தல் முறைமையைப் பயன்படுத்தி வட்டாரத்தில் தமது ஆள்களை நியமிக்காது, தமிழர்களை நியமித்து விட்டு, ஒவ்வொரு சபைக்குள்ளும் சிங்கள உறுப்பினர்களை உள் நிறுத்தி இருக்கிறார்கள்.

தாங்கள் எந்த சபையிலும் வெற்றி பெற முடியாது என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும். உங்கள் வீட்டு பிரச்சினைகளை நீங்களே தீர்க்க வேண்டும். எனவே சரியான கட்சியை நீங்கள் அடையாளம் காண வேண்டும்.

நாங்கள் யாரையும் குறை கூற வரவில்லை. தமிழ் கட்சிகளுக்கு வாக்களியுங்கள். அதில் தமிழ் கட்சிகளில் எதற்கு வாக்களித்தால் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை புரிந்து கொண்டு வாக்களியுங்கள்.

நாங்கள் அன்று முதல் இன்று வரை கூட்டமைப்பாகப் பயணித்துக் கொண்டு இருக்கிறோம். வீட்டுச் சின்னத்தில் நாங்கள் பல வருடங்கள் பயணம் செய்தோம். அந்த வீடு இன்று தமிழரசுக்கட்சியின் தனி சின்னம் என்பதால் அந்த வீடு இன்று தனியாகச் சென்று விட்டது.

ஆனால் இன்று ஐந்து கட்சிகள் இணைந்து எமக்கான ஒரு பொதுச் சின்னமாக சங்கு சின்னத்தில் தமிழர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

மக்களாகிய நீங்கள் கடந்த காலங்களில் தமிழ் கட்சிகள் எல்லாம் கூட்டாக செயல்படுங்கள், உங்கள் ஒற்றுமைக்கு வாக்களிப்போம் என்று கூறியுள்ளீர்கள். நாங்கள் கூட்டமைப்பாக இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்த அடிப்படையில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம். எனவே ஒற்றுமையின் சின்னமான சங்கு சின்னத்தை நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் பலப்படுத்த முடியும். – என அவர் தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் வட்டார வேட்பாளர்கள் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தமிழர்களின் கல்லறைகள் மீதான படை முகாம்களை அகற்றி, அவற்றை மீட்டெடுத்து உயர் மதிப்பளியுங்கள்

## நல்லிணக்கத்துக்கு அது அடிப்படையானது என அநுரவிடம் ராஜ் சிவநாதன் வற்புறுத்து





போருக்குப் பிந்தைய சகாப்தத்தின் மிகவும் வேதனையான விளைவுகளில் தமிழ் கல்லறைகள் அழிக்கப்பட்டன. நினைவு கூர்தல், துக்கம் அனுஷ்டித்தல் மற்றும் கண்ணியத்திற்கான புனித இடங்கள் அவை. இந்த இடங்களை புல்டோசர் செய்து அவற்றின் மேல் இராணுவ முகாம்களைக் கட்டுவது கலாசார மற்றும் மத உரிமைகளை மீறுவது மட்டுமல்லாமல், வரலாற்றை அழிக்கவும் துக்கத்தை வல்வந்தமாக அடக்கவும் முன்னெடுக்கும் ஒரு கொடூரமான முயற்சியாகும். இறந்தவர்களை மதிக்கும் உரிமை அரசியல் சார்ந்தது அல்ல – அது மனித உரிமையும் கூட.

– இவ்வாறு இன்று யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் மற்றும் ஜே.வி.பி.யின் உறுப்பினர்களுக்கும் தாம் பொதுவாக எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார் இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் சார்பில் ராஜ் சிவநாதன்.

தமிழ் மக்களுக்கான உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான அவசர அழைப்பு என்ற தலைப்பிலான அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

நான் இன்று உங்களுக்கு ஓர் அக்கறையுள்ள குடிமகனாக மட்டுமல்லாமல், இலங்கையின் தமிழ் மக்கள் அனுபவித்த ஆழமான காயங்கள் மற்றும் தீர்க்கப்படாத அநீதிகளால் ஆழமாக பாதிக்கப்பட்ட ஒருவராகவுமிக்கடிதத்தை எழுதுகிறேன்.

அரசின் மிக உயர்ந்த பதவிக்கும், ஆயுதமேந்திய எதிர்ப்பு மற்றும் ஓரங்கட்டப்படுதலின் விலையை அறிந்த அரசியல் எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தக் கடிதம் ஒரு அழைப்பு – நீதிக்காக மட்டுமல்ல, தார்மீக தைரியம், உண்மை மற்றும் தேசிய குணப்படுத்துதலுக்காகவும்.

சுதந்திரத்திற்குப் பிறகு, அடுத்தடுத்த அரசாங்கங்கள் தமிழ் சமூகத்தை முறையாக ஓரங்கட்டும் கொள்கைகளை இயற்றியுள்ளன. 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் தொடக்கம் கல்வித் தரப்படுத்தல் நடவடிக்கைகள் வரை, தமிழர்கள் சமூகத்தில் முழு பங்கேற்பிலிருந்து வேண்டுமென்றே விலக்கப்பட்டனர். இந்த நடவடிக்கைகள் தனிமைப்படுத்தப்பட்டவை அல்லது திட்டமிடப்படாதவை அல்ல – அவை சமத்துவமின்மை மற்றும் பிரிவினையை நிலைநிறுத்தும் கட்டமைப்பு முடிவுகள்.

அதைத் தொடர்ந்து வந்த தசாப்தங்கள் 1956, 1958, 1977 மற்றும் மிகவும் இழிவான முறையில் 1983 இல் நடந்த கறுப்பு ஜுலையின் போது மிருகத்தனமான தமிழர்கள் எதிர்ப்பு வன்முறையால் குறிவைக்கப்பட்டனர். இவை இனவெறியின் சீரற்ற வெடிப்புகள் அல்ல. இந்த நிகழ்வுகளில் அரசின் உடந்தை அல்லது குறைந்தபட்சம் சகிப்புத்தன்மை இருந்தது என்று உயிர் பிழைத்தவர்களும் சுயாதீன பார்வையாளர்களும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். அவை – மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், மற்றும் சில விளக்கங்களில், இனப்படுகொலை செயல்கள் – சர்வதேச அளவில் விசாரிக்கப்பட்டு அவை எதற்காக என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

போருக்குப் பிந்தைய சகாப்தத்தின் மிகவும் வேதனையான விளைவுகளில் தமிழ் கல்லறைகள் அழிக்கப்பட்டன. நினைவு கூர்தல், துக்கம் அனுஷ்டித்தல் மற்றும் கண்ணியத்திற்கான புனித இடங்கள் அவை. இந்த இடங்களை புல்டோசர் செய்து அவற்றின் மேல் இராணுவ முகாம்களைக் கட்டுவது கலாச்சார மற்றும் மத உரிமைகளை மீறுவது மட்டுமல்லாமல், வரலாற்றை அழிக்கவும் துக்கத்தை வல்வந்தமாக அடக்கவும் முன்னெடுக்கும் ஒரு கொடூரமான முயற்சியாகும். இறந்தவர்களை மதிக்கும் உரிமை அரசியல் சார்ந்தது அல்ல – அது மனித உரிமையும் கூட.

ஆயினும்கூட, துன்பங்கள் இருந்த போதிலும், எந்த இலங்கை அரசாங்கமும் தமிழ் மக்களிடம் முழுமையான மற்றும் நேர்மையான மன்னிப்பு கோரவில்லை. மனந்திருந்துதல் இல்லாதமை தொடர்ந்து தேசத்தைப் பிளவுபடுத்துகிறது. அத்தோடு உண்மையான நல்லிணக்கத்திற்கான எந்த நம்பிக்கையையும் விஷமாக்குகிறது.

நல்லிணக்கம் என்பது வெறும் மௌனத்தினாலோ அல்லது மறுப்பினாலோ பிறக்கவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். அது ஒப்புதல், பொறுப்புக்கூறல் மற்றும் தார்மீக தைரியத்திலிருந்து பிறக்கிறது.

இலங்கை குணமடைய வேண்டுமானால், அது உண்மையிலேயே ஒரு பன்முகத்தன்மை கொண்ட மற்றும் ஜனநாயக நாடாக மாற வேண்டுமானால், அது பின்வரும் படிகளுடன் தொடங்க வேண்டும்:-

1. தமிழ் மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட வரலாற்று மற்றும் முறையான அநீதிகளுக்கு முறையான அரசு மன்னிப்புக் கோரல்.
2. படுகொலைகள் மற்றும் போர் தொடர்பான அட்டூழியங்கள் உட்பட அனைத்து வெகுஜன வன்முறைச் செயல்களிலும் சுயாதீனமான, சர்வதேச அளவில் கண்காணிக்கப்பட்ட விசாரணைகள்.
3. இழிவுபடுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட தமிழர் கல்லறைகள் மற்றும் நினைவுத் தளங்களை மீட்டெடுப்பது மற்றும் பாதுகாப்பது.
4. அதிகாரப் பகிர்வு, மொழி உரிமைகள் மற்றும் சமமான பொருளாதார வளர்ச்சிக்கான உண்மையான அர்ப்பணிப்புடன், தொடர்ச்சியான பாகுபாடு கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது.

இவை வெறும் அரசியல் கோரிக்கை அல்ல. இது ஒரு தார்மீகத் தேவை. இலங்கையின் எதிர்காலம் உண்மையைச் சொல்வதிலும், கண்ணியம் மீட்டெடுக்கப்படுவதிலும், கடந்த காலத்தின் காயங்கள் ஒப்புக்கொள்ளப்படுவதிலும் சார்ந்துள்ளது – உண்மைகளை மறைத்துப் புதைக்கப்படுவதில் அல்ல.

அரசியல் பிரமுகர்களாக மட்டுமல்லாமல், நமது வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதும் திறன் கொண்ட தலைவர்களாகவும் செயல்படுமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன். இன வேறுபாடின்றி, இந்த நாட்டின் அனைத்து மக்களும் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் சம வாய்ப்புடன் வாழக்கூடிய ஒற்றுமை உணர்வு கொண்ட நாடு இது என்பதை அனைவரும் உணர வேண்டும். – என்று உள்ளது.



# தலைமன்னாரில் இருந்து தீடைகள் நோக்கி விரைவில் சுற்றுலாப் படகு சேவை ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

தலைமன்னாரில் இருந்து கடலின் நடுவில் உள்ள ஆறாவது தீடை (ஆறாவது மணல் திட்டு) வரையான சுற்றுலாப் பயணிகள் படகுச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

தலைமன்னாரில் இருந்து சுற்றுலாப் பயணிகளை தீடைகள் நோக்கி அழைத்துச் செல்லும் படகுச் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சகல எற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன, சேவை மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கடந்த மாதம் முரசு சுட்டிக் காட்டியது.

இலங்கை –,இந்திய நாடுகள் இடையே மிகவும் குறுகிய இடைவெளியை கொண்ட பிரதேசமாக தலைமன்னார் – இராமேஸ்வரம் பகுதி காணப்படுகின்றது. இங்கேயே சுற்றுலா மேம்பாட்டுத் திட்டமாக படகுச் சேவைச்சி ஆரம்பிக்க அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்காக ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இரட்டைக் குடியுரிமை கொண்டவர் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஆறு இருக்கைகள் கொண்ட 10 படகுகளை தலைமன்னார் பகுதிக்குத் தருவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவை தரையைத் தாண்டி கடல் பகுதிக்குள் சுமார் 13 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள 5 ஆவது தீடையைத் தாண்டி 6 ஆவது தீடைப் பகுதி வரையில் இடம்பெறவுள்ளது.



இலங்கை மற்றும் இந்தியா இடையில் உள்ள இந்தக் கடல் பகுதியில் இங்கே 11 தீடைகள் உள்ளன. இவற்றில் 6 தீடைகள் இலங்கையின் ஆளுகையிலும் 5 தீடைகள் இந்தியாவின் ஆளுகையின் கீழும் உள்ளன. இலங்கையின் ஆளுகையில் உள்ளது தீடை வரையிலேயே இந்தப் படகு சேவையை நடாத்தும் சாத்தியங்கள் தொடர்பாக நேரில் பார்வையிடுவதற்காக தலைமன்னார் கடற்படை முகாமில் இருந்து கடற்படையினர், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், வன ஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று 2025-03-18 அன்று புறப்பட்டது. தீடைகளிற்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது.

இக் குழுவினர் கடற்படையினர் தங்கியுள்ள 3 ஆவது தீடையில் இறங்கிப் பார்வையிட்டு அங்கே கடற்படையினரின் பாவனை அதிகம் என்பதனால் 3 ஆவது தீடையினை சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்ற முடிவிறகு வந்துள்ளனர்.

இவ்வாறே 4 ஆவது தீடையில் அதிக வெளிநாட்டுப் பறவைகள் தங்கியிருப்பதனால் அங்கும் அனுமதிக்க முடியாது என முடிவு செய்துள்ளனர். ஏனைய 4 தீடைகளிற்கும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் எதிர் வரும் 22 ஆம் திகதி இறுதிக் கட்டக் கூட்டம் இடம்பெற்று விரைவில் படகுச் சேவை ஆரம்பிக்கும் என மாவட்டச் செயலாளர் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.04.2025

## மேஷம்

இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

## ரிஷபம்

இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.

## சிம்மம்

இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்கலில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும்.

## கன்னி

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## துலாம்

இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.04.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ் நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

# தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்து!

## ஒருவர் பலி; மூவர் காயம்; டிக்கோயாவில் சம்பவம்










**(மஸ்கெலியா நிருபர்)**

தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமையில் ஒருவர் பலியானார். படு காயமடைந்த மூவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 7 மணிக்கு டிக்கோயா பகுதியில் இடம் பெற்று உள்ளது என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் நால்வர் காயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லலப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளையில் ஒருவர் மரணம் அடைந்தார் என்றும், ஏனைய மூன்று பேரும் திடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பகுதில் இருந்து ஹட்டன் நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும் ஹட்டன் பகுதியில் இருந்து டிக்கோயா பகுதிக்கு வந்த ஓட்டோவும் மோதிக் கொண்டதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டு உள்ளது எனப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.